


எங்கள் பாசத்திற்குரிய

# அமரர் திரு. புனித கிருபாகரன்

அவர்களின் நினைவாக வெளியிடப்படும்

# நினைவு மலர்

03.12.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



எங்கள் பாசத்திற்குரிய

## அமரர் திரு. புனித கிருபாகரன்

அவர்களின் நினைவாக வெளியிடப்படும்

# நினைவு மலர்

**03.12.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பின் அணிகலனாய்

பண்பின் சிகரமாய் – வாழ்ந்து

நாம் இன்புற்று வாழ

தன்னையே அர்ப்பணித்த எமது

தெய்வத்தின் பாதங்களில் இம் மலரை

சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# திரு.புனித கிருபாகரன் அவர்கள்



மண்ணில்
29.02.1968

விண்ணில்
03.11.2015

## திதி வெண்பா

மன்மத ஆண்டுதன்னில் மாதமாம் ஐப்பசியில்
சொன்னதிதி அபரபக்க அட்டமியாம் - மன்னுபுகழ்
பொய்புகலா நாவன் புனிதகிரு பாகரனார்
ஐயப்பன் தாளடைந்த நாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோத்திரப் பாடல்கள்

**திருச்சிற்றம்பலம்**

**விநாயகர் துதி**

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்றினை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

**தேவாரம்**

தாயினும் நல்ல தலைவர் என்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண் பலர் நீக்கி
நோயிலும் பிணியுந் தொழிலர் பால் நீக்கி
நுழை தரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலை அமர்ந்தாரே.

**திருவாசகம்**

மெய்தான் அரும்பி விதர் விதாத் துன்விரை
யார் கழற் கென்
கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றி யென்னும்
கைதான்நெகிழ விடேன்உடையாய் என்னைக்
கண்டுகொள்ளே.

**திருவிசைப்பா**

இடர்கெடுத் தென்னை யாண்டு கொண்டென்னுள்
இருட் பிழம்பற எறிந்தெழுந்து
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறியாமை
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்கு சக்கரமன்றருள் செய்தவன்
மன்னியதில்லை தன்னுள்
ஆலிற்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுஉன் அடியின்
கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்முறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள்சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நண்பர்களுடன் திரு. புனித கிருபாகரன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுகை மணற்பகுதியின்
# மூத்த பிரஜை ஒருவர் பார்வையில்....

## அமரர் புனித கிருபாகரன்

அமரர் கிருபாகரன் எமது மணற்பகுதி பிரதேசத்தின் பண்புள்ள பிரஜைகளில் ஒருவர் என்பதில் இரண்டு கருத்துக்கள் இல்லை. ஆன்மீக நாட்டமுள்ள இளைஞர். "ஆன்மீகத்தின் அடிப்படை ஒழுக்கமான வாழ்க்கை" என்பதற்கு அமரர் கிருபாகரன் சிறந்த உதாரணர். உடலும் வெள்ளை, உள்ளமும் வெள்ளை பொதுவாக அவர் ஒரு புனிதர். அதனால் தனது இயற்பெயருடன் "புனித" என்ற சொல்லைச் சேர்த்து "புனித கிருபாகரன்" எனும் நாமத்தை புனைந்து கொண்டார். மிகப் பொருத்தமான பெயர்.

கள்ளமில்லாச் சிரிப்பும், கனிவான பேச்சும், மென்போக்கும் கொண்ட இளைஞனாகவே அவரைக் கண்டோம். முதியோர் முன் கூனிக்குறுகி நின்று மரியாதையாக இரண்டொரு வார்த்தைகள் மட்டும் பேசுவார்.

தலைநகரில் பலகாலம் வாழ்ந்து இலத்திரனியல் சாதனங்கள் திருத்தும் தொழில்நுட்பம் பயின்றவர். அந்தத் தொழிலை மனநிறைவுடன் செய்து நிறைவாக வாழ்ந்தவர். வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டியாக இருந்து வாகனம் ஓட்டி அனுபவம் பெற்றவர். இதனால் ஆங்கில உரையாடலையும் அறிந்திருந்தார். சிங்களத்தில் சரளமாக பேசும் ஆற்றல் மிக்கவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது மகன் நிர்மலன் கொழும்பில் தனியார் கல்வி நிறுவனம் இயக்கிய போது பலவகையிலும் உதவிசெய்து, கொழும்பு வாழ்க்கையின் நெளிவுசுழிவுகளைக் கற்றுக் கொடுத்தவர்.

பூரணன் ஆக வாழ்ந்த போதும் இல்லறத்தில் பெரிதாக நாட்டமில்லாதவர். ஐயப்பன் மீது ஆறாத பக்தி கொண்டவர். ஐயப்ப விரதம் அனுஷ்டித்து புனிதம் பெருகியவர்.

எனினும் உறவினரும் நண்பர்களும் வற்புறுத்தியதன் காரணமாக இல்லறத்தில் இணைந்தார். வடமராட்சி வதிரியைச் சேர்ந்த செல்வமும், செல்வாக்கும் மிக்க செல்லத்துரை, செல்லப்பாக்கியம் தம்பதிகளின் செல்வப்புதல்வியை மணந்து இல்லற வாழ்வில் சிலவருடங்கள் மட்டும் வாழ்ந்தவர்.

எனினும் விஞ்ஞானத்தால் வெல்லமுடியாத கொடுநோயினால் ஐயப்பன் திருவடிகளை அணைந்தார். அமரத்துப் பேறுபெற்றார். அவர்தம் ஆத்ம சாந்திக்காக அனைவரும் ஐயப்பனை இறைஞ்சுவோம்!

*சாந்தி!!! சாந்தி!!! சாந்தி!!!*

நன்றி
புத்தூர் வே. இளைய குட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

புனித கிருபாகரன் என்பது அவன் பெயர். நடேசன் மாணிக்கம் தம்பதியினரிற்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். இவருக்கு 3 பெண் சகோதரிகளும் ஒரு ஆண் சகோதரரும் உடன் பிறந்த சகோதரர்கள் ஆவர்.

மூத்த சகோதரி புனிதவதி அவர்கள் தனது உறவினரான ஜெயந்திரன் அவர்களைக் கரம்பிடித்தும், 2வது சகோதரியான புவனா அவர்கள் மட்டுவிலைச் சேர்ந்த கனகரத்தினம் அவர்களை மணமுடித்தும் வாழ்ந்து வருகின்றனர். மற்றைய சகோதரி புவிதா அவர்கள் தனது உறவினரான சசிகுமார் ரு.மு அவர்களை மணம் முடித்தும் லண்டனில் வசித்து வருகின்றனர். சகோதரனனான வதனாகரன் அவர்கள் திருகோண மலையைச் சேர்ந்த சிவகலா அவர்களை மணம் முடித்தும் புத்தூரில் வசித்து வருகின்றனர்.

புனித கிருபாகரன் அவர்களிற்கு புவீந்திரன், சுபாங்கி, அஜந்தன், லக்சனா, லயாங்கி, லக்சிகா, லனுதனா, லக்மிகன், புகழ், அபூர்வா ஆகிய மருமக்களும் தக்சயா, பவித்திரன், ஐதுநிதா ஆகிய பெறாமக்களும் அன்புக்குரிய செல்வங்களாகும்.

இவ்வாறான அன்பான உறவுகளுடன் சேர்ந்து தனது குடும்பத்தின் இன்ப துன்பங்களில் எல்லாம் இணைந்து இன்று அமரத்துவம் அடைந்திருக்கும் அமரர் புனித கிருபாகரன் அவர்கள் இக் குடும்பங்களின் ஒளிவிளக்கு ஆவார்.

ஆரம்பக் கல்வியை புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்திலும் இடைநிலைக்கல்வியை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார்.

படிக்கின்ற காலத்தில் விளையாட்டுத் துறையில் ஆர்வம் கொண்ட கிருபாகரன் அவர்கள் பாடசாலையில் பல விளையாட்டுக்களிலும் பங்குபற்றி பல பரிசில்களையும் வெற்றி கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983ம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை அரசுக்கு எதிராக ஆயுதபோராட்டத்தில் நம்பிக்கை வைத்து தமிழ் இளைஞர்கள் பலரும் தங்களை ஒவ்வோர் ஆயுதக் குழுவிலும் இணைத்துக் கொண்ட காலகட்டத்தில் புனித கிருபாகரன் அவர்களும் தனக்கென புதிய பாதையை தேர்ந்தெடுத்துக்கொண்டவர்.

சிறிது காலத்தின் பின் மீண்டும் வந்து தனது குடும்பத்துடன் இணைந்து வாழத்தொடங்கிய காலத்தில் இக் கிராமத்தின் கலையகம் சனசமூக நிலையம் மற்றும் வீனஸ் விளையாட்டுக் கழகம் என்பவற்றுடனும் ஆன்மீக இருப்பிடமான ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்துடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு அந்நிறுவனங்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தவர். இந்த விடயம் அவரது குடும்பப் பரம்பரை இயல்புகளிடம் இருந்து அவரிற்கு கடத்தப்பட்ட ஒன்றாக கருதமுடிகிறது. சிறந்த உதைப்பந்தாட்ட வீரனாக தன்னை உருவாக்கிக் கொண்டு வீனஸ் விளையாட்டுக் கழகத்தின் மத்திய நிலை வீரனாக நின்று விளையாடி அக்கழகத்தின் பல வெற்றிக்காக உழைத்தவர் அமரர் என்று சொன்னால் மிகையாகாது.

யாழ்ப்பாணத்தின் உதைப்பந்து விளையாட்டுக் கலையில் தமக்கென ஒரு இடத்தைப் பிடித்து நீண்ட காலமாக சிறந்த விளையாட்டுக் கழகம் என்ற பெயரை வீனஸ் விளையாட்டு கழகம் தக்கவைத்திருந்தது என்பதனை இங்கு குறிப்பிட வேண்டும்.

இதனை விட வீனஸ் விளையாட்டுக்கழகத்தின் மைதானம் யாழ் குடா நாட்டில் அமைந்திருந்த உதைப்பந்தாட்ட மைதானங்களுள் சரியான அளவுப்பிரமானத்தை அமைத்துக் கொண்ட மைதானங்களுள் ஒன்றாக விளங்குகின்றது.

மைதானத்திற்கு கிழக்காக தொண்டமனாற்றுக் கடல் நீர்ஏரியின் தொடுவாயை கடல் காணப்படுவதால் இம் மைதானம் எப்போதும் ஈரலிப்பாகவும் மென்மையான புற்றரைகளை கொண்டதுமான அழகான மைதானமாக காணப்படுகின்றன. இம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. புனித கிருபாகரன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைதானத்தின் விளையாடிய ஒரு பெருமைக்குரிய வீரராக அமரர் புனித கிருபாகரன் இருக்கின்றார்.

இவ்வாறு தனது கிராமத்துடன் இணைந்திருந்த அமரர் அவர்கள் 1995ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து கொழும்பை இருப்பிடமாகக் கொண்டார்.

பாடசாலையில் படிகின்ற காலத்தில் தொழில் நுட்பமுறையில் ஈடுபாடுகொண்ட புனித கிருபாகரன் கொழும்பிலே வானொலி, தொலைக்காட்சி போன்றவை பற்றிய தொழில்நுட்பக் கலையை பயின்று அத்துறையில் தன்னை வளர்த்துக் கொண்டவர்.

அதனூடாக வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றை சிறந்த முறையில் பழுதுபார்த்து கொள்வதில் கைவந்த கலைஞராக தன்னை மாற்றிக் கொண்டது மட்டுமன்றி அத்துறையே தனது தொழில்துறையாகவும். தெரிவு செய்து கொண்டார்.

பத்து வருடத்திற்கு மேலாக கொழும்பிலே வசித்த கிருபாகரன் அவர்கள் மீண்டும் தனது ஊரான புத்தூரிற்கு வருகை தந்து குடும்பத்துடன் வசிக்கத் தொடங்கினார். தாய், தந்தையர் அமரத்துவம் அடைந்துவிட்டதன் காரணத்தால் சகோதரியான புனிதவதி அவர்களின் அரவணைப்பில் அவரது பிற்காலம் அமைந்திருந்தது.

உற்றார், உறவினருடன் சுற்றத்தாருடன் மகிழ்ச்சியாக இருந்த காலகட்டத்தில் மருத்துவ பரிசோதனையின் மூலம் நோய்க்கான அறிகுறி தென்படத் தொடங்கியது. எனினும் சத்திரசிகிச்சை மூலம் அதிலிருந்து குணமடைந்து கொண்டார்.

அவரது நோய் அவருக்கும் எந்தவிதமான பாரதூரமான விளைவுகளையும் கொடுக்காது என்ற மருத்துவர்களின் உறுதிமொழியை அடுத்து தனக்கு ஒரு வாழ்க்கைத் துணையைத் தேடி திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையில் வதிரி செல்லம்மை வாசத்தைச் சேர்ந்த அமரர்களான செல்லத்துரை, செல்லப்பாக்கியம் தம்பதியினரின் இளைய மகளான வனஜா அவர்களைத் திருமணம் செய்து மகிழ்வுடன் கூடி வாழும் போது மீண்டும் பழைய நோயின் அறிகுறிகள் அவரை உபாதைக்கு உற்படுத்தியது.

கணவன் குணமடைந்து வருவார் என்ற நம்பிக்கையில் மனைவி இறுதி வரை சேர்ந்திருந்து அவருக்கான மருத்துவ சிகிச்சை அளிக்கும் நடவடிக்கையில் இணைந்திருந்து செயற்பட்டார்.

யோகர் சுவாமிகள் கூறியதைப் போன்று "என்றைக்கோ முடிந்த காரியம்" என்றதற்கமைய கிருபாகரன் அவர்கள் தனது நாற்பத்தேழாவது வயதில் தனது வாழ்க்கைப் பாதையை முடித்து அமரத்துவம் அடைந்தார்.


மனிதன் பிறக்கும் போதே அவனது இறப்பும் நிச்சயிக்கப்படுகின்றது. அது எப்போது என்பது இறைவனுக்கு மட்டும் தான் தெரியும். இன்பமும் துன்பமும் மாறி மாறி வருபவை. இன்பத்தைக் கண்டுவிட்டால் இதுவே நிரந்தரம் என்றும் அதேபோல் துன்பத்தைக் கண்டுவிட்டால் இதுதான் இறுதி முடிவென்று நினைப்பது அறிவியல் சார்ந்த மனித சிந்தனைக்குத் தவறானது.

அமரர் புனித கிருபாகரன் அவர்களது மறைவு உண்மையில் ஒரு துன்பகரமான நிகழ்வுதான். இது அவரது குடும்பத்துக்கு மட்டுமன்றி இக்கிராமத்திற்கே ஒரு பேரிழப்பாகும். ஆனால் இதுவே வாழ்க்கையின் முடிவல்ல. மானிடராய் பிறந்த நாம் தொடர்ந்தும் எமது நல்வாழ்வுக்காக செயலாற்ற வேண்டுமென சிந்திப்பதே மனிதனுக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட நெருக்குவாரம் எனக் கூறி அமரர் புனித கிருபாகரன் அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமணவாழ்வில் திரு. புனித கிருபாகரன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றங்கள் யாவுமே உங்கள் நினைவால் வாடுதே!

**பல்லவி** *ராகம் : சக்கரவாகம்*

*இதமாகப் பேசியெம் இதயம் கவர்ந்தவரே!*
*ஈடிவா உம்மிழப்பால் எம்மனம் வேகுதே!*

**அனுபல்லவி**

*விதமாகப் பல தொழிலும் செய்தவரே!*
*வீணாகப் போனதையா உன் வாழ்வே!*

**சரணம்**

*உறவுகள் செழித்துப் பரவியே வாழ்ந்த*
*ஊரவருள் மகளைக் கரம்பற்றி வசித்த*
*அறநெறி வழியில் ஆஸ்திகனாய் மகிழ்ந்து*
*அன்பாக எம்மோடு வாழ்ந்தார் திகழ்ந்து*
*(இதமாக)*

*ஊர்கள் பலதேடி தங்கைக்கு வந்தவர்*
*உள்ளங்கள் மகிழச் சிறப்பொடு வாழ்ந்தவர்*
*சேர்ந்தாரே எமது இதயங்கள் உறைந்தது*
*செய்வது அறியாது உடல் விறைத்தது*
*(இதமாக)*

*தொழில்நுட்பவாதியாக வந்தார் சித்தப்பா*
*தொல்லைதரு நோய்தீர்க்க கொழும்பு வந்தோமப்பா*
*எழில்மிகு அழகனைக் காத்திட முடியவில்லை*
*ஏங்கி அழாதிருக்க எம்மால் இயலவில்லை*
*(இதமாக)*

*என்று தணியுமோ எங்களின் சோகம்*
*எங்கள் வீட்டுநல் சகவனின் தாகம்*
*குன்றாய் குணம் கொண்ட மாமனிதன்*
*குறைகள் ஏதும் இல்லா புனிதன்*
*(இதமாக)*

*"செல்லம்மை வாசம்"*
*"செல்வலோஜிதம்"*
*குடும்பம் . வதிரி.*

*ஆக்கம். அதிஸ்டன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் எங்கள்
# நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

எமது குடும்பத்தின் ஒளி விளக்காக இருந்து இன்முகத்துடன் தனது கடமைகளைச் செய்த நிலையில், எங்கள் அன்புத்தெய்வம் ஈசனின் பாதங்களைச் சங்கமித்த வேளையில் , எம் துயரிற் பங்கு கொண்டவர்களுக்கும் , இல்லத்தையும் வீதியையும் குருத்தோலைத் தோரணங்கள், வாழைகளால் அலங்கரித்தவர்களுக்கும், ஈமக்கிரியைகள், காடாற்றுதல் மற்றும் எட்டுச்செலவு , அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் யாவற்றிலும் பங்கு கொண்டவர்களுக்கும் இரங்கற் செய்திகளை உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலுருந்தும் தொலைபேசி மூலம் தெரிவித்து ஆறுதல் கூறி உதவிகள் புரிந்தோருக்கும், கிரியைகள் நடத்திய குருமார்களிற்கும் , நேரில் வந்து அனுதாபங்களை பகிர்ந்து கொண்டோருக்கும், தேநீர், உணவு வழங்கி இறுதிவரை கை கொடுத்து உதவிய உற்றார், உறவினர், அயலவர், நண்பர்களுக்கும் இம்மலரினை அழகுற அச்சுப்பதிப்பேற்றிய போஸ்கோ அச்சகத்திற்கும் மற்றும் அனைவரிற்கும் எம் உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம்
உலக நியதியாகும்.



Boasco Arune Printers Nallur Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org